

# காக்கைச் சிறகினிலே இதழ்க் குழுமம் முன்னெடுக்கும்

## கவிஞர் கி. பி. அரவிந்தன் நினைவு




## தமிழ் இலக்கியப் பரிசு 2018

# உலகத் தமிழ்க் குறுநாவல் போட்டி

## சிறந்த எழுத்தாளர்களுக்கான பரிசுத் தொகையும் சான்றிதழுமான பரிசுகள்.

## பிரசுரத் தகுதி கொண்ட படைப்புகளுக்கு சிறப்புப் பரிசுகள்.

«சென்றிடுவீர் எட்டுத் திக்கும் - கலைச் செல்வங்கள் யாவுங் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்!»
எனும் பாரதியின் கனவின் பிரதிபலிப்பான தேடல்கள்!

உலகத் தமிழ் - குறுநாவல் பரிசுப் போட்டியாக இம்முறை நடாத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கேற்ப குறுநாவல்களை உலகத் தமிழ் எழுத்தாளர்களிடம் கோரப்படுகிறது. உலகளாவிய சுயாதீனப் படைப்புகளை வழங்கும் ஆற்றலாளர்களைக் கௌரவிக்கும் முகமாக இந்தப் போட்டி அமைகிறது. இத்தெரிவில் ஏற்கனவே ஊடகங்களில் வெளிவந்த ஆக்கங்கள் பரிசீலனைக்கு எடுக்கப்படமாட்டாது.

தொன்மமும் நீட்சியுமாக நீண்ட நெடிய பயணத்தில் இயங்கும் தமிழ் இயல் - இசை - நாடகமென்ற முத்தளத்தையும் கடந்து புதிய 'கணினித் தமிழாக' நான்காவது பரிமாணத்தில் இன்று பவனி வரும் சூழலில், 'யாதும் ஊரே யாவரும் கேளிர்!' என்றபடி பாரெங்கும் விரவி வாழும் உலகத் தமிழ்ப் படைப்புப் போட்டியாக இது அமையப் பெறுகிறது.

1. சுய ஆக்கமாக உலகத் தமிழ் எழுத்தாளர் பங்குபற்றும் போட்டியாக இது அமைகிறது. இதுவரையில் ஊடகங்களில் பிரசுரமாகாத படைப்பு என்ற உத்தரவாதம் போட்டியாளரால் தரப்பட வேண்டும்.

2. கணனித் தமிழ் எழுத்துருவில் காக்கை இதழில் அதிகபட்சம் 35 பக்கங்கள் (ஏ4 தாள்களில் 28 - அண்ணளவாக 10000 சொற்களுக்கு மிகைப்படாத) கொண்டனவாக இந்தக் குறுநாவல்கள் அமையலாம்.

3. தமது சுய விபரத்தையும் தொடர்பு விபரத்தையும் தனக்கான மின்னஞ்சலையும் எழுத்தாளர் கொண்டிருத்தல் வேண்டும்.

4. படைப்புகளை எதிர்வரும் 05.01.2018 இற்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.
   போட்டியாளரது தொடர்பு முகவரி : kipian2018kaakkaicirakinile@gmail.com

5. காக்கை இதழ்க் குழுமத்தின் தெரிவுக்குழுவின் முடிவே இறுதியானதாக அமையும். இந்த முடிவுகள் 2018 மார்ச்சு கடைசி வாரத்தில் முறைப்படி காக்கை குழுமத்தினால் வெளியிடப்படும்.

6. நெறியாளர் தமிழ் இலக்கிய ஆர்வலர் இ. பத்மநாப ஐயர் அவர்களது வழிகாட்டுதலுடன் உலகளாவிய தமிழ் எழுத்தாளர்கள் கொண்ட நடுவர் குழு பரீட்சித்து முடிவுகளை அறிவிக்கும்.
   நடுவர் குழு :
   1. மதிப்புக்குரிய பேராசிரியர் அ. ராமசாமி (இந்தியா)
   2. மதிப்புக்குரிய எழுத்தாளர் ரஞ்சகுமார் (அவுஸ்திரேலியா)
   3. மதிப்புக்குரிய எழுத்தாளர் இளவாலை விஜயேந்திரன் (நோர்வே)

7. பரிசுகள்:

முதல் பரிசு : 10 000 இந்திய ரூபாய்கள் மற்றும் சான்றிதழ்

இரண்டாவது பரிசு : 7500 இந்திய ரூபாய்கள் மற்றும் சான்றிதழ்

மூன்றாவது பரிசு : 5000 இந்திய ரூபாய்கள் மற்றும் சான்றிதழ்

மூன்று ஆறுதல் பரிசுகள் : 2000 இந்திய ரூபாய்கள் மற்றும் சான்றிதழ்

தெரிவாகும் தகுதிபெற்ற குறுநாவல் எழுத்தாளருக்கு சிறப்புப் பரிசு : காக்கைச் சிறகினிலே ஓர் ஆண்டுச் சந்தா

**காக்கை இதழ்க் குழுமத்தின் தெரிவுக் குழுவின் முடிவே இறுதியானதாக அமையும்.**
**மார்ச்சு 2018இல் முடிவுகள் அறிவிக்கப்படும்.**

